பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**15 05 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரதமர் திரு நரேந்திர மோ டி, ஐந்து நாடுகள் பயணத்தின் முதல் கட்டமாக இன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் புறப்பட்டுச் செல்கிறார்.

**2.** நாட்டின் பாதுகாப்புக் கொள்கை கடந்த 12 ஆண்டுகளில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றங்களைக் கண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

**3.** கடல்சார் உணவுப் பொருட்களின் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 72 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

**4.** சூரிய சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான தொழில்நுட்பங்களில் நாடு விரைவான வளர்ச்சி அடைந்து வருவதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

**5.** உலக உஷூ சாண்டா சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அபர்ணா, தங்கப் பதக்கம் வென்றார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஐந்து நாடுகளுக்கு **6** நாட்கள் அரசுமுறைப் பயணத்தை இன்று தொடங்குகிறார்.

தமது பயணத்தின் முதல் கட்டமாக இன்று அவர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் புறப்பட்டுச் செல்கிறார்.

அந்நாட்டு அதிபர் திரு. ஷேக் முகமது பின் சையல் அல்நஹ்யானுடன் பிரதமர் இருதரப்பு பேச்சு நடத்தவுள்ளார்.

இருதரப்பு விவகாரங்கள், எரிசக்தி துறையில் ஒத்துழைப்பு, மண்டல மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் விரிவாக ஆலோசனை நடத்த உள்ளனர்.

இதனிடையே பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பயணத்தை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளதாக அந்நாட்டு சர்வதேச விவகாரங்கள் துறை இணையமைச்சர் **Reem Bint Ebrahim Al-Hashmi** கூறியுள்ளார்.

இரு நாடுகளும் நீண்டகாலமாக நல்லுறவைக் கொண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பயணத்தை தொடர்ந்து இரண்டாம் கட்டமாக பிரதமர் நெதர்லாந்து செல்ல உள்ளார்.

அங்கு அந்நாட்டின் பிரதமர் திரு. Rob Getten உடன் திரு. நரேந்திர மோடி இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

மூன்றாம் கட்டமாக 17ஆம் தேதி ஸ்வீடன் செல்லும் பிரதமர், அந்நாட்டுப் பிரதமர் திரு. Kristersson உடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

அங்கு ஐரோப்பிய தொழில்துறை வட்டமேஜைக் கூட்டத்திலும் இரு தலைவர்களும் உரையாற்ற உள்ளனர்.

நான்காவது கட்டமாக 18ஆம் தேதி நார்வே செல்லும் பிரதமர், இந்தியா - நார்டிக் உச்சிமாநாட்டில் பங்கேற்க உள்ளார்.

அந்நாட்டுப் பிரதமர் திரு. ஜோனஸ் கஹார் உடன் பிரதமர் இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

ஐந்தாம் கட்டமாக 19 மற்றும் 20ஆம் தேதிகளில் இத்தாலியில் பயணம் மேற்கொள்ளும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, அந்நாட்டுப் பிரதமர் திருமதி ஜார்ஜியா மெலோனியுடன் இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

இத்தாலி அதிபர் திரு. செர்ஜியோ மாட்ரெல்லாவுடனும் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

<<<<<>>>>>

நாட்டின் பாதுகாப்புக் கொள்கை கடந்த 12 ஆண்டுகளில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றங்களைக் கண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் **Nagaur-**ல் சிலை திறப்பு நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தீவிரவாத த்திற்கு எதிராக இந்தியா சமரசமற்ற கொள்கைகளை பின்பற்றி வருவதாக கூறினார்.

**2016**ஆம் ஆண்டில் துல்லிய தாக்குதல், **2019**ஆம் ஆண்டில் பாலாகோட் தாக்குதல், கடந்த ஆண்டில் ஆபரேஷன் சிந்தூர் போன்றவை நமது பாதுகாப்பு படைகளின் திறனை வெளிப்படுத்தி உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா அமைதியையே விரும்புவதாகவும், ஆனால் அத்துமீறலில் ஈடுபடுவோருக்கு தகுந்த பதிலாடி கொடுப்பதாகவும் அவர் கூறினார்.

பாரம்பரியத்துடன் வளர்ச்சி என்ற நோக்கத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் முக்கிய தலைவர்களுக்கு சிலைகளும், நினைவுச் சின்னங்களும் அமைக்கப்படுவதாக திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<>>>>>

கடல்சார் உணவுப் பொருட்களின் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 72 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

மீன்வளத்துறையில் ஏற்றுமதி வாய்ப்புகள் குறித்த ஆய்வுக் கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பேசிய அமைச்சர், மீன்வளத்துறையில் ஏற்றுமதியை அதிகரிக்க அத்துறையும், வர்த்தகத்துறையும் இணைந்து பணியாற்றி வருவதாக கூறினார்.

மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

நாட்டின் ஒட்டுமொத்த மீன்வள ஏற்றுமதி சூழலை வலுப்படுத்தும் நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் பேசிய மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், ஏற்றுமதியை அதிகரிக்க சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் தமது அமைச்சகம் இணைந்து செயல்படுவதாக தெரிவித்தார்.

அந்தமான் நிகோபார் மற்றும் லட்சத்தீவுகளில் உள்ள சூறைமீன் போன்ற அதிக மதிப்புள்ள மீன்களின் ஏற்றுமதியை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் கூறினார்.

<<<<<>>>>>

சிங்கம் மற்றும் புலிகளைப் பாதுகாக்க மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

குஜராத்தில் கிர் பகுதியில் சிங்கங்கள் பாதுகாப்பு தொடர்பான மாநாட்டை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

சர்வதேச புலிகள் கூட்டமைப்பின் மாநாடு புதுதில்லியில் ஜூன் ஒன்று மற்றும் இரண்டாம் தேதிகளில் நடைபெற உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதில் **95** நாடுகளைச் சேர்ந்த **400** பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளதாக அவர் கூறினார்.

சிங்கம், புலி, சிறுத்தை, பனிச்சிறுத்தை, சிவிங்கிப்புலி உள்ளிட்ட விலங்குகளின் பாதுகாப்பு தொடர்பாக இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் சிங்கங்களின் எண்ணிக்கை 32 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் திரு. பூபேந்தர் யாதவ் கூறினார்.

<<<<<>>>>>

பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. சிராக் பஸ்வான் கூறியுள்ளார்.

லே-யில் இது தொடர்பான கண்காட்சியை தொடங்கி வைத்த அவர், இத்துறையில் தொழில்முனைவோரை ஊக்குவிக்க அரசு பல்வேறு கடன் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

கடந்த 12 ஆண்டுகளில் உணவு பதப்படுத்துதல் துறை மிகப்பெரிய வளர்ச்சியைப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உணவு இந்தியா மாநாடு மூலம் அதிக அளவில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் திரு. சிராக் பஸ்வான் தெரிவித்தார்.

<<<<<>>>>>

சூரிய சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான தொழில்நுட்பங்களில் நாடு விரைவான வளர்ச்சி அடைந்து வருவதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் கீழ் இயங்கும் மத்திய மின்னணுவியல் நிறுவனத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள 200 மெகாவாட் சூரிய மின்சக்தி ஆலையை நேற்று அவர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

பசுமை எரிசக்தி தொடர்பான இலக்குகளை அடைவதில் சூரிய மின்சக்தி, காற்றாலை மின்சக்தி, அணுசக்தி மற்றும் கடல்சார் எரிசக்தி அமைப்புகள் முக்கிய பங்காற்றும் என்று அவர் கூறினார்.

புதைபடிவமற்ற மின்சக்தி உற்பத்தியில் நாடு தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி சூழலில் மத்திய மின்னணுவியல் நிறுவனம் முக்கிய பங்காற்றுவதாக அவர் கூறினார்.

1979ஆம் ஆண்டிலேயே இந்த நிறுவனம் முதலாவது சூரிய மின் உற்பத்தி அமைப்பை நிறுவியதை அவர் சுட்டிக்காட்டினார்.

அணுசக்தி துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்கள், அணு மின்சக்தியை மேலும் அதிகரிக்கும் என்று திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>

நீட் தேர்வு தொடர்பாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை மேற்கொண்டார்.

இதில் தேசிய தேர்வு முகமை, சிபிஎஸ்இ உள்ளிட்டவற்றின் அதிகாரிகள் பங்கேற்றனர்.

எந்தவித சிக்கலுமின்றி நீட் மறுதேர்வை நடத்துவது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

தில்லியில் நகர்ப்புற மேம்பாட்டுப் பணிகள் விரைவுபடுத்தப்படும் என்று மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார்.

இது தொடர்பான ஆய்வுக் கூட்டத்திற்குப் பின் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், போக்குவரத்து மற்றும் குடியிருப்புகள் மேம்பாடு தொடர்பாக தில்லி மேம்பாட்டு ஆணைய அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டதாக தெரிவித்துள்ளார்.

அனைவரையும் உள்ளடக்கிய வகையில் வளர்ச்சியை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

மின்னணுவியல் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்க அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் தொழில்நுட்பம், பிளாக் செயின் தொழில்நுட்பம் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

இளையோர் மற்றும் ஆராய்ச்சியாளர் மத்தியில் புதுமைக் கலாச்சாரத்தை ஊக்குவிக்க அரசு முன்னுரிமை அளிப்பதாக திரு. ஜிதின் பிரசாதா கூறினார்.

<<<<<>>>>>

உத்தரப்பிரதேசத்தில் சூறைக்காற்றுடன் கூடிய கனமழை தொடர்பான சம்பவங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை **111**-ஆக அதிகரித்துள்ளது. **200**க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் சம்பவ இடங்களுக்குச் சென்று நிவாரணப் பணிகளை விரைவுபடுத்துமாறு முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் அருணாச்சலப்பிரதேசம், அசாம், மேகாலயா, கர்நாடகா ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரள மாநிலத்தின் 14 மாவட்டங்களுக்கு இன்று கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேரளம் மற்றும் லட்சத்தீவின் கடலோரப் பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தில்லியின் சில இடங்களில் இன்று அதிகாலை பலத்த காற்று வீசியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நகரின் சில இடங்களில் இன்று லேசான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

உலக உஷூ சாண்டா சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அபர்ணா தஹியா, தங்கப் பதக்கம் வென்றார்.

Macau-வில் நடைபெற்ற போட்டியில் மகளிர் 52 கிலோ எடைப்பிரிவு இறுதியாட்டத்தில் வியட்நாமின் Thi Phuong-ஐ வென்று அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியின் இன்றைய ஆட்டத்தில் முகமதன் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**